பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 10உ (26—7—67) புதன் ★ வெளியூர்: ஆடி 11உ (27—7—67) வியாழன் [இதழ்: 36

அரசுடைமையாகும் முதல் பஸ்

ஆகஸ்டு முதல் ஓடும்

சென்னை, சூலை 25—

தமிழக அரசின் பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக ஆகஸ்டு முதல் சென்னையிலிருந்து ஆரணிக்கு, தமிழக அரசுப் போக்குவரத்துப் பேருந்து விடப்படவிருக்கிறது.

சென்னை—ஆரணி வழியில் ஓடிக் கொண்டிருக்கும் தனியார் பேருந்து ஒன்றின் அனுமதி சூலை 31-ம் நாளுடன் முடிவடைகிறது; ஆகவே, இவ் வழியில் அரசுப் பேருந்து விடப்படும்.

சென்னை, சூலை 25—

மேட்டூர் அணையின் இன்றைய நீர் மட்டம் 62.7 அடி.

அணைக்குள் 24,700 கியூசெக் தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

நாட்டு வாட்டம் போக்கிட நோட்டடித்தால் போதுமா?

கற்பனைக்கும் எட்டாத திட்டங்களே சீர்கேட்டுக்குக் காரணம்

நாடாளுமன்றத்தில் செழியன் குற்றச்சாட்டு

புதுடில்லி, சூலை 25—

இன்று மக்களவையில் நிதி மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட பல்வேறு உறுப்பினர்களும் அரசைக் கடுமையாகக் கண்டித்தனர்.

பல்வேறு யோசனைகளும், கோரிக்கைகளும் தெரிவிக்கப்பட்டன; ஆனாலும், அவற்றில் பெரும்பாலானவை நிதித் தொடர்பானவையல்ல,

"சட்டமன்றத்தில் உள்ளவர்கள் கட்சி மாறுவதைத் தடுக்கும் வகையில் அரசியல் கட்சிகளுக்குள் ஓர் ஒழுக்க விதிமுறையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்" என்றும் ஓர் யோசனை தெரிவிக்கப்பட்டது.

இன்றைய விவாதத்தைத் துவக்கி வைத்த சுயேச்சை உறுப்பினர் டி. வி. விசுவநாதன், 'நேர்மையான நிர்வாசம் நடைபெற வேண்டுமானால், வியாபாரிகளின் தொடர்பை நீக்கவேண்டும்' என்று அரசினருக்கு எச்சரிக்கை விடுத்தார்.

தி. மு. க. உறுப்பினர் இரா. செழியன் பேசுகையில் மத்திய—மாநில அரசுகளுக்கிடையேயுள்ள நிதித் தொடர்பை மறு ஆய்வு செய்யவேண்டும் என்றும், மதுவிலக்கினால் தமிழக அரசுக்கு ஏற்படும் இழப்பில் பாதியை மத்திய அரசு ஏற்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

ஊதிய முடக்கம் செய்யும் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்த திரு. செழியன், 'விலைவாசிகள் கட்டுப்படுத்தப்பட்டுவிடுமானால் ஊதிய முடக்கத்துக்கு அவசியமே இராது' என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"வரையறுக்கப்பட்ட வருவாய் உடைய மக்கள், கடன்களுடன் போராடிக் கொண்டிருக்கின்றனர்! பணவீக்க நிலையை எதிர்த்துச் சமாளிக்க முடியாத நிலையில் உள்ளனர்!

கடந்த 20 ஆண்டுக்காலமாக அரசினர் கடைபிடித்து வந்திருக்கும் கற்பனைக்கும் ஒவ்வாத கொள்கைகளே இதற்குக் காரணம்.

தேசிய வருமானம் பெருகும் அளவைவிட 'நாசிக்'கிலிருந்து (அரசின் பண நோட்டுகள் அடிக்கும் அச்சகத்திலிருந்து) வெளியாகும் பணத்தின் பெருக்கம் அதிகமாக உள்ளது.

நாட்டின் மொத்த தேசீய வருவாய்—ஏட்டுக்கணக்கின்படிப் பார்த்தாலும்—கடந்த 15 ஆண்டுக் காலத்தில் 64 சதவிகிதம்தான் உயர்ந்திருக்கிறது! பணப் பெருக்கமோ 146 சதவிகிதம் ஏற்பட்டிருக்கிறது!

விலைவாசிகள் உயருவது பொருளாதார வளர்ச்சியைக் காட்டுவதாக அரசினர் கூறியபோதிலும், ஏற்பட்டுள்ள விலைவாசி ஏற்றம், உலகில் வேறு எந்த இடத்திலும் ஏற்பட்டிராத அளவுக்கு—கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு உயர்ந்துவிட்டிருக்கிறது!

மத்திய-மாநில அரசுகளுக்கிடையே வருவாயைப் பங்கிட்டுக்கொள்வது குறித்து மறு ஆய்வு செய்யப்படவேண்டும்.

1966—67-ல் மத்திய அரசுக்கு ரூ. 2,000 கோடி வருவாய் கிடைத்திருக்கிறது. அதே நேரத்தில் மாநிலங்கள் ரூ. 1,295 கோடிதான் பெற்றிருக்கின்றன."

திரு. செழியன் மேலும் பேசுகையில், 'தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்' என்று கோரினார்.

"மதுவிலக்குக் கொள்கையால் மக்களுக்கு நற்பயன் ஏற்பட்டு வருவதைக் கருதி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தமிழகத்தில் தொடர்ந்து மதுவிலக்கை கடைபிடிக்க முடிவு செய்திருக்கிறது" என்பதைத் தெரிவித்தார்.

"தி.மு.க. ஆட்சியின் புரட்சிகரமான படி அரிசித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, மத்திய அரசினர் நிதியுதவி தேவை" என்றும் வற்புறுத்தினார்.

'ஆட்சிக் கவிழ்ப்பு வீரர்'கள் படுதோல்வியடைந்தனர்

அசைக்க முனைந்தவர்களுக்கு ஏற்பட்ட கதி!

குட்டுவெளிப்பட்டதும் சட்டமன்றத்திலிருந்து காங்கிரசார் ஓட்டம்!

பாட்னா, சூலை 25—

காங்கிரசல்லாத பீகார் மாநில அமைச்சரவையைக் கவிழ்க்க வேண்டுமென்று காங்கிரசுக் கட்சி செய்த முயற்சி தோல்வியடைந்தது.

இதனால் அமர்க்களப்பட்டிருந்த சட்டமன்றத்திலிருந்து காங்கிரசார் வெளிநடப்புச் செய்தனர்.

"தங்களது இயலாமையை மறைக்கக் காங்கிரசார் கையாண்ட கடைசிநேர முயற்சியாகும் இது" என்று அரசியல் வட்டாரம் இது குறித்துக் கருதுகிறது.

• சியாமசுந்தர் பிரசாத் என்னும் காங்கிரசு உறுப்பினர், கேள்வி நேரம் முடிந்ததும், தாம் காங்கிரசிலிருந்து விலகியதற்கான காரணங்களை விளக்க ஆரம்பித்ததும், சபையில் சூடுபிடிக்க ஆரம்பித்தது.

இத்துடன், ஜனசங்க உறுப்பினர் கோபால் மராண்டி எனபவர், தாம் முந்திய நாள் இரவு காங்கிரசு மேல்சபை உறுப்பினர் ஒருவரால் கடத்தப்பட்டதாகவும், இன்று போலீசார் வந்து தம்மை மீட்கும் வரை அங்கேயே நிறுத்திவைக்கப் பட்டிருந்ததாகவும் சபையில் சொன்னதும் நிலைமை மேலும் மோசமாகிவிட்டது.

எதிர்க் கட்சித் தலைவர் எம். பி. சின்கா (காங்கிரசு) உடன், காங்கிரசில் சேருவதாக மராண்டி எழுதித்தந்த கடிதமொன்றைக் காட்டினார்.

இதுகுறித்து மராண்டி, தம்மிடம் நிர்ப்பந்தப்படுத்தி அக்கடிதத்தில் கையெழுத்து வாங்கியதாகக் கூறினார்.

போலீசுத்துறை அமைச்சர் இராமானந்த் திவாரி, ஜனசங்கத் தலைவர் செய்த புகாரின் பேரில் போலீசார் நடவடிக்கையில் இறங்கியதாகக் கூறினார்.

இதைத் தொடர்ந்து கண்டனங்களும், எதிர்க் கண்டனங்களும் ஒருவருக்கொருவர் செய்ய ஆரம்பித்தனர்.

திரு. மராண்டி கூறியதை அவை நடவடிக்கைப் பதிவேட்டிலிருந்து நீக்கவேண்டுமென்று காங்கிரசு உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து, 'கூடாது, கூடாது' என்று குரலெழுப்பப்பட்டது.

'பதிவேட்டிலிருந்து மேற்படி நிகழ்ச்சியை நீக்கமுடியாது' என்று அவைத் தலைவர் கூறியதும் காங்கிரசார் வெளிநடப்புச் செய்தனர்.

இந்தி இணைப்பு மொழி என்பது கற்பனை வாதம்

எதிர்காலத்தில் ஆட்சிமொழியாகப் போகிறது என்பதும் வெறும் யூகம்

தமிழக அரசின் மொழிக் கொள்கையே தேவை

நாடாளுமன்றக் கல்விக் குழு அறிக்கையில்

க. அன்பழகன் எதிர்ப்புக் குறிப்பு

புதுடில்லி, சூலை 25—

இந்தியை இணைப்பு மொழியாகத் திணிக்க வகை செய்யும், (நாடாளுமன்ற உறுப்பினர்களடங்கிய) கல்விச் சீரமைப்புக் குழு அறிக்கையில் 9 பேர் எதிர்ப்புக் கருத்தறிவித்துள்ளனர்; அவர்களில் நாடாளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் பேராசிரியர் க. அன்பழகனும் ஒருவர் ஆவார்.

திரு. க. அன்பழகன் எழுதியுள்ள எதிர்ப்புக் குறிப்பில், 'ஆங்கிலத்துக்குப் பதில் இந்தியே இணைப்பு ஆட்சி மொழியாக வேண்டும் என்ற கருத்து, உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது—நியாயத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல' என்று தெரிவித்துள்ளார்.

"எல்லா வட்டார மொழிகளும் சம தகுதியைப் பெற்று, சமவுரிமையுடன் நடத்தப்படுவதன் மூலமே இந்த உணர்ச்சி திருப்தி செய்யப்பட முடியும்" என்றும் திரு. அன்பழகன் கூறியிருக்கிறார்.

தமிழக அரசு தற்போது பின்பற்றிவரும் மொழிக் கொள்கை வருமாறு:—

1. கற்பிக்கப்படும் முதல் மொழியும், பயிற்றுமொழியும் தாய்மொழியாக—அதாவது வட்டார மொழியாக இருக்க வேண்டும்.
2. ஆங்கிலம் அல்லது ஏதாவது ஓர் அந்நிய மொழி தொடக்கக் கல்வியின் மூன்றும் ஆண்டிலிருந்து கற்பிக்கப்பட வேண்டும்.
3. மூன்றுவது கட்டத்தில்:—அதாவது 9,10,11-வது வகுப்புக்களில் இந்தி அல்லது ஏதாவது ஓர் இந்திய மொழி கற்பிக்கப் பட வேண்டும். மூன்றுவது மொழியில் பெறும் மதிப்பெண்கள் தேர்வில் கணக்கில் கொள்ளப்படமாட்டா.

மொழிக் கல்வியைப் பொறுத்து இக்குழு செய்துள்ள பரிந்துரையை திரு. க. அன்பழகன் ஏற்கவில்லை; தற்போது தமிழக அரசு பின்பற்றி வரும் ஏற்பாட்டையே அவர் பரிந்துரைத்துள்ளார்.

"'ஏற்கனவே இந்தி இணைப்பு மொழியாக நடைமுறையில் இருந்துவருகிறது' என்று அறிக்கையில் பெரும்பான்மையினர் தெரிவித்திருப்பது, அடிப்படையற்றதாகும்; இது, 'இந்தி பேசாத பகுதி மக்கள், எதிர்காலத்தில் இந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளும் போது, இந்தி, இந்தியாவின் ஆட்சிமொழியாகிவிடும்' என்று கூறப்பட்டிருப்பது போல கற்பனையை அடிப்படையாகக் கொண்டதாகும்"

என்று, திரு. க. அன்பழகன் கருத்தறிவிக்கிறார்.

கல்விக் குழுவின் பரிந்துரைஎன்ன?

"வட்டார மொழியே கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் பயிற்று மொழியாக்கப்பட வேண்டும் அத்துடன் இந்தியை இணைப்பு மொழியாக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

"கல்வி முறை முற்றிலும் பண்டைய பண்பாட்டு அடிப்படையில் இருக்க வேண்டும். அதே நேரத்தில் தற்கால அறிவியல் தொழில் நுட்பம் முதலியவற்றிற்குச் சிறப்பிடம் தரப்பட வேண்டும்"

என்பதே, நாடாளுமன்றக் கல்விக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரையாகும்.

எல்லா மாநிலங்களிலும் பத்து ஆண்டுப் பள்ளிப் படிப்பை உடனடியாகச் செயல்படுத்த வேண்டும் என்பதும் படிப்படியாக முதல் வகுப்பிலிருந்து பத்தாவது வகுப்பு வரை அல்லது 16-வது வயதுவரை எல்லோருக்கும் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும் என்பதும் அந்த அறிக்கையின் பரிந்துரைகளாகும்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 10 (26—7—67) புதன்

'எழுச்சி நாள்'— தமிழ் மக்களின் எச்சரிக்கை

தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுத்தும் பணியை, ஏற்கனவே திட்டமிட்டபடி தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தவும், சேலம் உருக்காலைத் திட்டத்தை உடனடியாகத் துவக்கவேண்டும் என்பதை வலியுறுத்தவும் தமிழகமெங்கும் எழுச்சி நாள் கொண்டாடப்பட்டிருக்கிறது.

எழுச்சி நாள் கூட்டங்கள் தமிழக முக்கிய நகரங்களில் மட்டுந்தான் நடைபெற்றிருக்கின்றன என்பதில்லை; சிறு நகரங்களிலும், பல நூற்றுக்கணக்கான சிற்றூர்களிலும்கூட அக்கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

எழுச்சி நாள் கூட்டத்தை நடத்த சூலை 23-ம் நாள் குறிப்பிட்டிருந்தபோதிலும், தக்க பேச்சாளர்களைக்கொண்டு மேற்படி திட்டங்களை விளக்கும் கூட்டங்களை நடத்தவேண்டும் என்ற கருத்தில் பல ஊர்களில் இனியும் தொடர்ந்து கூட்டங்கள் நடைபெற உள்ளன. அக்கூட்டங்கள் அனைத்திலும் குறிப்பிடத்தக்கவர்கள் பங்கு கொண்டு, இரண்டு திட்டங்களைக் குறித்தும் தெளிவான விளக்கத்தைத் தரவும் உள்ளனர்.

எழுச்சி நாள் கூட்டங்களிலிருந்துதான், சேலம் உருக்காலையின் தேவையைக் குறித்தும், தூத்துக்குடித் திட்டத்தை நிறைவேற்றுவதால் ஏற்படக்கூடிய நற்பயன்கள் பற்றியும் தமிழ்மக்கள் முதல் முறையாகத் தெரிந்துகொண்டனர் என எவரும் கூறத் துணியார். அவ்விரண்டு திட்டங்களினுல் தமிழகத்தின் செல்வ வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் ஏற்படக்கூடிய ஏற்றத்தை, ஏற்கனவே தமிழக மக்கள் தெரிந்தே இருக்கின்றனர்.

எனவே, எழுச்சி நாள் ஒவ்வொன்றிலும், ஆங்காங்கே இருக்கின்ற மக்கள் கலந்துகொண்டிருப்பது, இரண்டு திட்டங்களினுலும் விளைந்திடக்கூடிய நற்பயன்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமே அல்ல; இரண்டு திட்டங்களையும் பெறுவதில் தங்களுக்குள்ள ஆர்வத்தையும் அக்கறையையும், உறுதிப்பாட்டையும், தெரிந்துகொண்டும் தெரியாதவர்கள்போல் நடித்து வருபவர்களும், உண்மையிலேயே தெரியாது இருப்பவர்களும் தெளிவாகத் தெரிந்துகொள்ளத்தக்க வகையில் வெளிப்படுத்தவே, பல்லாயிரக்கணக்கில் கூடுவதன்மூலம், எழுச்சி நாளை ஏற்ற முறையில் தமிழக மக்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

எழுச்சி நாளில் நடைபெற்ற கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் பெரும் அளவில் மக்கள் பங்குகொண்டிருப்பது, மேற்குறித்த உண்மையைத்தான் உணர்த்துகிறது. தமிழக மக்கள் உணர்த்தியிருக்கக்கூடிய இவ்வுண்மையை, இந்திய அரசு சீர்தூக்கிப் பார்த்து, இரண்டு திட்டங்களையும் குறித்துத் தான் கொண்டிருக்கின்ற போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். அப்படி மாற்றிக் கொள்ள இந்திய அரசு முன்வரும் என்றே நம்புகிறோம்.

இரண்டு திட்டங்களையும், 'அரசியல் கட்சிகள் மட்டுந்தான் கோரி வருகின்றன' என்ற தவருன கருத்துக்கு இனி இடம் கிடையாது; தமிழ் மக்கள் அனைவருமே இவ்விரண்டு திட்டங்களையும் பெறுவதில் உறுதியுடையவர்களாக உள்ளனர் என்பது, எழுச்சி நாள் வாயிலாக உறுதிப்பட்டுவிட்டது.

'எழுச்சி நாள்'பற்றி முதலமைச்சர் அண்ணு அவர்கள் முதன் முதலாகக் கருத்தறிவித்தபொழுது, 'எழுச்சி நாளா—ஐயோ, வேண்டாமே' என்றும், எழுச்சி நாளில் கூட்டங்களா—சமூக விரோதிகள் அதைப் பயன்படுத்திக்கொண்டு நாச வேலையில் ஈடுபடுவார்களே' என்றும், 'எழுச்சி நாளா? தீ வைப்புகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலா?' என்றும், காய்கறி வாங்கக் கடைக்குச் சென்ற பொழுது சந்தித்த கூட்டத்தைத் தவிர, குறிப்பிட்ட குறிக்கோளுக்காகக் கூடுகின்ற ஆயிரக்கணக்கான கூட்டத்தைக் கனவிலும் சந்தித்தறியாத பொதுவாழ்வினர் சிலர், அலறிப் புடைத்தனர்; தங்கள் அறியாமையை எழுத்து மூலம் விளம்பரப்படுத்தியும் கொண்டனர்,

'எழுச்சி நாள்' கூட்டங்கள் 'குழப்பத்தில் முடியக்கூடாதா?' என்றும், 'கூட்டங்களில் கலகம் ஏற்பட்டால் அதைச் சுட்டிக் காட்டி, முன்னேற்றக் கழக ஆட்சியை சிலநாள் சாடிக்கொண்டிருக்கலாமே' என்ற கெடு நினைப்பில், 'எழுச்சி நாள்' கூட்டங்களில் 'குழப்பமும் கலகமும் மூண்டிட வேண்டும்' என்றும், உண்ணுநோன்பிருந்த அரசியல் உத்தமர்களும் உண்டு!

ஆனுல், இவ்வாறெல்லாம் சிலர் அஞ்சியதுபோலவும், எச்சரித்து எழுதியதுபோலவும், ஆசைப்பட்டதுபோலவும் 'எழுச்சி நாள்' கூட்டங்கள் ஒன்றிலாவது சிறு சலசலப்பும் ஏற்படவில்லை. முதலமைச்சர் அண்ணு கலந்துகொண்ட எழுச்சி நாள் கூட்டமும் சரி—கழகத்தைச் சார்ந்த ஊழியர் கலந்துகொண்ட சிற்றூர் கூட்டமும்சரி—எதிர்பார்த்ததைவிட முழு அளவில் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளன.

'எழுச்சி நாள்' கூட்டங்கள் முழு அளவில் வெற்றிகண்டிருக்கின்றன. இம்முதல் வெற்றி, இரண்டு திட்டங்களையும் பெறுவதில் நாம் பெறவிருக்கின்ற வெற்றியைக் கோடிட்டுக் காட்டும் முன்னறிவிப்பு!

இரண்டு திட்டங்களையும் பெறுவதில், 'எழுச்சி நாள்' கூட்டங்களில் தமிழக மக்கள் வெளிப்படுத்தியிருக்கின்ற உறுதிப்பாடு, 'வெற்றி பெற்றே ஆகவேண்டும்—வெற்றி பெறும்' என்பது உறுதியிலும் உறுதி.

அரசியல் கட்சிகளின் கோரிக்கை என்பதற்காக அலட்சியம் காட்டத் துணிந்த மத்திய அரசு, அனைத்து மக்களின் கோரிக்கை என்பது தெளிவாக்கப்பட்ட பின்னரும் கூடவா, அலட்சியம் காட்டத் துணியும்?

மக்களின் ஒருமித்த விருப்பத்தை நிறைவேற்றி வைப்பது தான், மக்களாட்சி முறையில் நம்பிக்கை கொண்டிருக்கின்ற அரசின் தலையாய கடமையாகும். இந்தக் கடமையைச் சுட்டிக் காட்டி, 'தமிழக மக்களின் ஒருமித்த கோரிக்கையை அலட்சியப் படுத்த வேண்டாம்' என, இந்திய அரசை எச்சரிக்கவேண்டியது நமது கடமையாகிறது.

—கா. க.

கல்வியில் கழகம் கொண்டுள்ள நாட்டம்!

முன்னைய ஆட்சியைவிடக் கூடுதலாக ரூ. 14 கோடி ஒதுக்கியுள்ளோம்

காங்கிரசு கிளப்பிவிட்ட புரளிக்கு அண்ணு பதில்

வேலூர், சூலை 22—

"பள்ளி இறுதி வகுப்புவரையிலாவது ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும். நகரத்தில் உள்ளவர்கள் மட்டுமன்றி, கிராமவாசிகளும் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை காட்ட வேண்டும்"

என்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், சாயிநாதபுரத்தில் ரூ. 1¾ இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள என். கிருஷ்ணசாமி முதலியார் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் வற்புறுத்தினர்கள்.

விழாவுக்கு வேலூர் நகராட்சித் தலைவர் மா. பா. சாரதி எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். பள்ளித் தலைமையாசிரியர் திரு. சீனிவாசராகவன் நன்றிகூறினர். சென்னைத் தீ விபத்து துயர்தணிப்பு நிதிக்கு அண்ணு அவர்களிடம் ரூ. 2,860 கொடுக்கப்பட்டது.

அண்ணு அவர்கள் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தி. மு. க. ஆட்சி ஏற்பட்டால் பள்ளிகளையெல்லாம் மூடிவிடுவார்கள் என்றுகூட, காங்கிரசார் தேர்தல் காலத்தில் பிரசாரம் செய்தார்கள்.

"காங்கிரசு ஆட்சியின்போது கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணம் ஆண்டுக்கு ரூ. 40 கோடிதான்; ஆனுல் நாங்கள் இந்த ஆண்டுக்கு ஒதுக்கியிருப்பது ரூ. 54 கோடியாகும்.

"கல்வியே எங்களுக்கு இருக்கின்ற ஒரே செல்வமாகும்; கல்வியின் பயனை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். அப்படியிருக்க மற்றவர்கள் கல்வியறிவு பெறுவதையா தடுப்போம்—எல்லோரும் படிக்கவேண்டும் என்பதே எங்கள் விருப்பம்."

தேசீயம் மத விரோதம்!

கன்னட மாநிலத்திலுள்ள ஹால்காவிலுள்ள உயர்நிலைப் பள்ளி ஒன்றின் தலைமையாசிரியர், கிருத்துவர்களிடையே 'யெஹோவா' பிரிவைச் சேர்ந்த தனது மாணவியொருத்தி தேசியக் கொடியை வணங்கவும், நாட்டுப் பண்ணை இசைக்கவும் மறுப்பதாகக் கூறியிருக்கிருர்.

இது, பெண்ணின் பெற்ருேர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டபொழுது, கொடியை வணங்குவதும், நாட்டுப் பண்ணை இசைப்பதும் கிருத்துவ மனச்சான்றிற்கு எதிராக இருப்பதாக அவர்கள் கூறியிருக்கிருர்கள்.

இந்திக்காரர்களின் 'சொந்தப்பிரச்சினை!'

'வந்தேமாதரம்' என்று கூறுவதே தேசத் துரோகம் என்று கருதப்பட்டுவந்த காலத்திலேயே தமிழில தேசியப் பாடல்கள் இயற்றிய சுப்பிரமணியபாரதியாரைப் போல், இந்தியில் நாட்டுப்பற்றூட்டும் பாடல்களை இயற்றியவர் மாக்கன்லால் சதுர்வேதி என்ற கவிஞர்.

இந்த முதிய கவிஞர், கடந்த சில ஆண்டுகளாகவே நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாக இருக்கிருராம்.

இவருக்கு என்று ஒரு சிறிய சொந்த வீடுகூட இல்லை என்றும், 40 ஆண்டுகளாக இவர் வசித்துவரும் வீட்டிலிருந்து இவரை வெளியேறும்படி வீட்டுச்சொந்தக்காரர் வற்புறுத்திக் கொண்டிருக்கிருர் என்றும் சொல்கிருர்கள்.

இந்தி பேசப்படாத பகுதிகளில் மத்திய அரசு இலட்சம் இலட்சமாகப் பணத்தைக் கொட்டி அதைப் 'பரப்ப'வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருக்கும் இந்திக்காரர்களின் கண்ணில், தங்கள் மத்தியில்—தங்கள் நலனுக்காகவே இலக்கியப் பணி புரிந்த ஒரு கவிஞர் வயோதிகத்தில் வறுமையிலும், நோயினும் வாடிக்கொண்டிருப்பது படாமல் போயிருக்கிறது!

தமிழக மக்களின் பொருளாதாரநிலை

ஆய்வு நடத்தத் திட்டம்

சென்னை, சூலை 24—

தமிழக மக்களின் உண்மையான பொருளாதாரநிலைமை பற்றி மதிப்பிட்டறிய மாநில அரசு, வருகிற சனவரியிலிருந்து வீடு வீடாகச் 'சர்வே' நடத்தும்.

அரசாங்கம் முதலில் இந்த ஆய்வை, முக்கிய நகரங்களில் நடத்தும்; பிறகு அது கிராமங்களுக்கு விரிவுபடுத்தும்.

"மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு அமுலாக்கப்படும் பல்வேறு சமூகநலத் திட்டங்களால் உண்மையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிவதற்கு விரிவான ஆய்வு தேவை" என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

"அரசு விரும்புவது மக்களைப் பாதிக்கும் பிரச்சினைகளைப் பற்றி நாளது வரையிலான தகவல்களைப் பெறுவதாகும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

"சனத்தொகை வேகமாக அதிகரிப்பதால் அநேகமாகச் சமாளிக்கமுடியாதவையாகிவரும் பிரச்சினைகளைச் சமாளிக்க நாம் உண்மையிலேயே விரும்பினுல், சராசரிக் குடும்பங்களின் அன்ருட சங்கடங்களை நாம் அறிந்து கொண்டாக வேண்டும். அதற்கு நாம் கைக்கொள்வதற்கான சிறந்த வழிகளில் ஒன்று இந்த ஆய்வு ஆகும். குடும்பக் கட்டுப்பாட்டு அமுலுக்கும் இந்த ஆய்வை நன்கு பயன்படுத்தலாம்" என்று அரசு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருக்கிருர்.

தமிழகத்தில் சீரணிப் படை

ஆகஸ்டு 15-ல் சென்னையில் துவக்கம்

திருச்சி, சூலை 24—

"வருகிற ஆகஸ்டுத் திங்கள் 15-ம் நாள் முதன் முதலாக சென்னை மாவட்டத்தில் சீரணிப் படை துவக்கப்படவிருக்கிறது" என்ற தகவலை இங்கு செய்தியாளர்களிடம் முதலமைச்சர் அண்ணு அவர்கள் வெளியிட்டார்.

"இந்தப் படை, 1,000 பேர்களைக் கொண்டு அமைக்கப்படும்; 20 வயதுக்கு மேற்பட்டவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்" என்றும் அண்ணு விளக்கமளித்தார்.

"இந்தச் சீரணிப் படைக்கு அதிகாரப் பற்றற்றவர்களே தலைவர்களாக இருப்பார்கள். இதை அமைப்பதில் கட்சிக்கண்ணேட்டம் எதுவுமிருக்காது. இப்படையினர், தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் பலதரப்பட்ட பொதுப் பணிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை அரசாங்க அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள்; இத்திட்டம் படிப்படியாக இதர மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்படும்" என்றும் அண்ணு அவர்கள் மேலும் தெரிவித்தார்.

சிறைச்சாலையில் விவசாயப் பண்ணை!

சண்டிகார், சூலை 22—

200 ஏக்கர் நிலத்தில் விவசாயப் பண்ணை ஒன்றை நடத்த பஞ்சாப் சிறை இலாகாவினர் உத்தேசித்திருக்கிருர்கள்.

உடல் உறுதி உள்ள சிறைக் கைதிகள் இந்தப் பண்ணையில் வேலை செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

சிறை இலாகாவினர் ஏற்கனவே சில சிறிய விவசாயப் பண்ணைகளை இலாபகரமாக நடத்திவருகிருர்கள்.

பண்ணையில் வேலை பார்க்கும் கைதிகளுக்கு ஊதியமும் உண்டு

காங்கிரசு—சி.ஐ.ஏ. தொடர்பு?

சில நாட்களாகவே காங்கிரசு அமைச்சர்களும், தலைவர்களும் அமெரிக்கத் துப்பறியும் நிறுவனத்துடன் (சி. ஐ. ஏ.-வுடன்) தொடர்பு கொண்டிருப்பதாக கம்யூனிஸ்டுகள் குற்றஞ்சாட்டுவதும், காங்கிரசுக்காரர்கள் அதனை மறுப்பதும், அன்ருட நிகழ்ச்சிகளாகி வருகின்றன.

மைசூர் மாநிலச் சட்டமன்றத்தில் பேசும்போது சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள், 'அமெரிக்கத் துப்பறியும் நிறுவனத்துடன் முதலமைச்சரின் மருமகனுக்குத் தொடர்பு இருப்பது உண்மையா?' என்றும், 'தேர்தலுக்கு முன்பாக முதலமைச்சரின் மருமகன் பிரேஜில் நாட்டிற்குச்சென்றுவந்தது உண்மைதானு?' என்றும் சந்தேகங்களைக் கிளப்பியுள்ளார்கள்.

சனநாயகத்துக்குத் தீங்கு

சென்னை, சூலை 24—

"உத்தரப்பிரதேசத்தில் மட்டும் கடந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு 50 தடவை முதல் 60 தடவை வரையில் உறுப்பினர்கள் கட்சிவிட்டு கட்சி பாய்ந்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன். இது இரு தரப்பிலிருந்தும் நடந்திருக்கிறது. சனநாயகத்துக்கு இது தீங்கு ஆகும்"

என்று, சுதந்தரக்கட்சி செயலாளர் எம். ஆர். மசானி, செய்தியாளர்களிடம் கூறினர்.

மூன்றே ஆண்டுகளில் குறைகளை நீக்கிக்காட்டுகிறேன்

'சரியான ஆள் தக்க நேரத்தில் கிடைத்தான்' என்று உள்ளூர மகிழுங்கள்

என்னிடம் தரப்பட்டுள்ள சொத்துக்களின் நிலையையும் எண்ணிப்பாருங்கள்

காங்கிரசுக் கட்சியினருக்கு அறிஞர் அண்ணா தரும் பதில்

தமிழகச் சட்டமன்றத்தில் நிதி ஒதுக்கீடு மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் மற்றொரு பகுதி (முன் இதழின் தொடர்ச்சி) இங்கு தரப்படுகிறது :—

எந்த நிலையில் ஆட்சிப் பொறுப்பை நாங்கள் ஏற்றோம்?

நான் மத்திய அரசை, ஒரு விரோதி அரசாகக் கருதவில்லை. அவர்களிடத்திலே எல்லாவிதமான அதிகாரமும் இருக்கிற காரணத்தால்தான் அப்படி நாங்கள் பேசுகிறோம்.

இந்தச்சர்க்காருடைய பொறுப்பை ஏற்றுக்கொண்டு — இந்த நிதி நிலை அறிக்கையைக் கொடுத்து —உங்களுடைய பேராதரவோடு பெற்றுக் கொள்கின்ற நேரத்தில் நாங்கள் எந்த நிலையில் அரசாள வந்தோம் என்பதைப் பார்க்கவேண்டும்; அதை நாம் மறந்துவிடக்கூடாது.

கொஞ்சம் வழுக்கல் நிலத்தில் நிற்கிறோம் என்பதை மனதில் கொண்டால்தான், காலை ஊன்ற வேண்டும்; வெயில் அதிகமாக இருக்கும்போது, காலை, பட்டும் படாததுமாக வைக்கவேண்டும்.

கொஞ்சம் பொடி மணலாக இருந்து—அதுவும் நடுப்பகலாக இருந்தால், 'ஓட்டமும் நடையும்' என்பார்களே — அதுபோல் ஓடிக்கொண்டே இருக்கவேண்டும்.

அதைப்போல் இந்தச் சர்க்காருடைய பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது, நாங்கள் எந்த நிலைமையில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்பதை அருள் கூர்ந்து யோசித்துப் பார்க்க வேண்டும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்கத்தில்—இரண்டு வருடத்திற்குப் பின்—நாங்கள் வந்திருக்கிறோம்.

அந்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எங்கிருந்து பணம் கிடைக்கும்? பல தூதுவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி எவ்வளவு பணம் கடனாகப் பெறப் போகிறார்கள் என்பதாவது தெரியுமா என்றால், இல்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டு வருடத்தை முழுக்க முழுக்க ஓட்டிவிட்ட நிலையில் நாங்கள் அரசு நடத்த வந்திருக்கிறோம்!

எதுவும் தெரியாத நிலைமை ஏனோ?

திரு. இராசாசி அவர்கள்கூட, "நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகத் தெரிவிக்கப்படவில்லை; ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இரண்டு வருடத்திற்கு ஓயவு கொடுங்கள்—அதாவது, 'ஹாலி டே' கொடுங்கள்" என்று கூறினார்கள்.

அவர் கூறியதற்கு, மத்திய ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் ஆத்திரத்தோடு பதில் கொடுத்தார்கள் — "இந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெற வேண்டும்; நடு ஆற்றிலேபோய், 'இது வரையில் போனது போதும்; இனி ஆற்றைக் கடக்க வேண்டாம்' என்று அங்கேயே உட்கார்ந்துவிட்டால் அந்த மனிதனின் கதி என்ன ஆவது? திட்டத்தை ஆரம்பித்துவிட்டு நடுவில் ஓய்வு கொடுத்தால் அது எப்படி முழுமை அடையும்? இவரா பெரியவர்?" என்று!

ஆனால் இன்று என்ன நடந்திருக்கிறது? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டிலே இன்று இருக்கிறோம்; அது எப்படியிருக்கும் என்று யாருக்கும் தெரியாது—அதில் என்ன கிடைக்கும் என்று அறிவிக்கப்படவில்லை — எங்கிருந்து பணம் கிடைக்கும் என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை—எந்தெந்த நாடு கடன் கொடுக்கும்—அதுவும் தெரியவில்லை!

கடன் எவ்வளவு கிடைக்கும் என்பதிலேதான் நமக்குக் குறி?

அடுத்த மாதம் திரு. மொரார்ஜி தேசாய், வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் போக இருக்கிறார். 'திக்விஜயம்' என்று பெருமை தரக்கூடிய வார்த்தையாக வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகத் தெரிவிக்கப்படவில்லை. ஒவ்வொரு உறுப்பினரிடத்திலும் நீல நிற அட்டை போட்ட புத்தகம் ஒன்று கொடுக்கப்பட்டிருக்கும்; அதில், 'இன்னின்ன இனத்திற்கு இவ்வளவு' என்று ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும்.

இது, கடன்காரனிடம் பணம் கொடுத்தவன் போனபோது, அவன் ஒற்றைக் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு, அவனுக்கு வரவேண்டிய பாக்கிகளையெல்லாம் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தானாம்;— 'சோமசுந்தரம் ஆயிரம் ரூபாய் கொடுத்தால் சொக்கலிங்கத்திற்கு ரூ. 300 கொடுத்துவிடலாம்; கந்தன் ரூ. 500 கொடுத்தால் கருணாகரனுக்கு ரூ. 20-ஐ கொடுத்துவிடலாம்' — என்று இப்படியாகக் கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தானாம்!

அதுபோல், நாம் புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு, 'இங்கிலாந்திலிருந்து ஆயிரம் கோடி வந்தால் இதைச் செய்துவிடலாம்; அமெரிக்காவிலிருந்து ரூ. 200 கோடி வந்தால் இதைச் செய்துவிடலாம் என்று கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்—(சிரிப்பு) 'இது இது செய்ய இருக்கிறோம்' என்று—என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். (மீண்டும் சிரிப்பு)

உருத் தெரியா நேரத்தில் வந்த எங்கள் நிலை என்ன?

மூன்று ஐந்தாண்டுத் திட்டமும் முடிந்து—நான்காவது திட்டம் இன்னதென்று உருத் தெரியாத நேரத்தில் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம்! நாங்கள் வந்த போது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம், 'இந்தியா, நான்காவது குழந்தையைப் பெற்றெடுத்தது'போல் இது உள்ளது!

நான்காவது குழந்தை வளர்ந்து வந்தவுடன், 'நான் தாது வருடத்தில் பிறந்தேன்; எனக்கு முன்னே மூன்று பிள்ளைகள் இருந்தனர்; ஒருவன் அந்தப் பக்கம் போனவன் மீண்டும் வரவேயில்லை; இன்னொருவன் குளத்தில் விழுந்து இறந்துவிட்டான்; மூன்றாமவன் அங்கே ஊர் சுற்றிக்கொண்டிருக்கிறான்; நான், நான்காவது மகன்' என்று சொல்லும் அளவிலே—நண்பர் கருத்திருமன் அவர்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்த நேரத்தில், 'எப்படிப்பட்ட சொத்தைக் கொடுத்துவிட்டுப் போகிறோம்?' என்று சொன்னார்கள்.

அதையேதான் மத்திய அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள், 'you have inherited a very good property' என்று சொல்லியிருக்கிறார்.

உள்ளபடியே இந்தச் சொத்துக்களை ஒருவர் கையிலே கொடுக்கிறபோது, அவருக்கு முதலில் மகிழ்ச்சியாகத்தான் இருக்கும்; ஆனால் பிறகு, அதன்பேரில் இருக்கும் கடன்—பொறுப்புக்களைக் கணக்கு பார்க்கிறபோதுதான், 'ஏன் எடுத்துக்கொண்டோம்' என்றுதான் நினைக்கத் தோன்றும்.

சொத்து விவகாரத்தில், பொருள் —பொறுப்பு என்ன என்பதை ஓய்வு இருக்கிறபோது நண்பர் காசிராமன் அவர்களிடத்தில் பேசிப் பாருங்கள்;—'இவை ஒன்றும் இல்லாமல் இருப்பது தான் நிம்மதி' என்று கூறுவார்.

எதிர்பார்த்த பலன் முழுமையாகக் கிடைத்ததா?

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்த நேரத்தில், எதிர்பார்த்த பலன் கிடைத்திருந்தால் மகிழ்ச்சியடையலாம். 'பலன் கிடைத்தது' என்று சொல்லலாமே தவிர, 'எதிர்பார்த்த பலன்' கிடைத்தது என்று எவ்வளவு தீவிரமான காங்கிரசுக்காரர்களும் சொல்ல மாட்டார்கள் — திடீர் என்று சேர்ந்தவர்கள் வேண்டுமானால் சொல்வார்கள்!

நண்பர் கருத்திருமன் அவர்கள், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மதிப்பீடு புத்தகத்தை வைத்துக்கொண்டு ஒவ்வொரு பட்டியலாகப் பார்க்கலாம்; உணவு உற்பத்திக்கு எதிர்பார்த்தது எவ்வளவு?—பெற்றது எவ்வளவு?—இம்மாதிரி ஒவ்வொன்றுக்கும், எதிர்பார்த்ததைவிடச் செலவழித்த பணம் அதிகம்! கிடைக்குமென்று எதிர்பார்த்த பலனைவிட கிடைத்திருப்பது குறைவு! ஆகவே முழுமையாக எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை.

உங்கள் எண்ணம் அந்த நிலையிலிருக்கும்!

சாதாரணமாக, 'உங்களுக்கு என்ன சங்கடம்?' என்று கேட்பீர்களானால், இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்துவதற்கு நீங்கள் போடவேண்டிய அளவுக்கு வரிகளைப் போட்டுவிட்டீர்கள்? வாங்கவேண்டிய அளவுக்கு நீங்கள் கடன்களையெல்லாம் வாங்கியிருக்கிறீர்கள்?

வரிகளையும், கடனையும் ஏராளமாக ஏற்றித் திட்டங்களை நடத்தி, பலனும் கிடைக்காமல்—பலன் கிடைக்காத நிலையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர், எங்கள் கையில் ஆட்சியைக் கொடுத்து, 'உங்களால் முடிந்தால் இந்த ஐந்து வருடம் பாருங்கள்' என்கிறீர்கள்!

உள்ளபடி, நீங்கள் அதிருஷ்டக்காரர்கள்! சில வேளைகளில் வேண்டுமானால், 'பதவி போய் விட்டதே' என்ற சங்கடம் இருக்கலாம்; ஆனால், உள்ளத்திற்குள், 'சரியான சமயத்தில் ஒரு ஆள் வந்து சேர்ந்தான்' என்றுதான் நினைத்துக் கொண்டிருப்பீர்கள்!

அப்படிப்பட்ட நிலையில் இது தரப்பட்டிருக்கிறதே தவிர, ஒன்றும் நிம்மதியான நிலையில் தரப்படவில்லை.

திரு. கே. விநாயகம்:—"நீங்கள் ஐந்து வருடமும் தொடர்ந்து இருந்தாக வேண்டும்."

அண்ணா:—"நண்பர் விநாயகம், 'ஐந்து வருடமும் இருந்தாக வேண்டும்' என்கிறார். எனக்கு ஐந்து வருடம் வேண்டாம்—மூன்று வருடத்திலேயே இன்றைக்குள்ள குறைபாடுகளைத் திருத்திக் காட்டுகிறேன்.

எந்த நிலையிலே எங்களிடம் ஆட்சியை ஒப்படைத்தீர்கள்?

நீங்கள் எங்களிடத்தில் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்த நேரத்தில் ரூ. 7 கோடிக்குத் துண்டு விழுகிற பட்ஜெட் — ரிசர்வ் பாங்கியிடம் ரூ. 3 கோடி 'ஓவர் டிராப்ட்'—மத்திய அரசுக்குக் கொடுத்தாகவேண்டிய வட்டி ரூ. 14 கோடி—அசல் ரூ. 24 கோடி; போன வருடத்தில் கொடுக்கவேண்டிய தொகையில் கொடுக்காது பாக்கி வைத்திருப்பது ரூ. 5 கோடி—இந்த வருடம் கொடுத்தாகவேண்டிய தொகை ரூ. 5 கோடி—படி அரிசித் திட்டத்தினால் நாங்களாக ஏற்படுத்திக்கொண்ட துண்டு ரூ. 5 கோடி—நீங்கள் ஏற்கனவே வாங்கி வைத்திருக்கிற கடன் -- கனிவெய்தி இவ்வாண்டு திருப்பிக் கொடுக்கும் வகையில் இருப்பது ரூ. 13 கோடி—சிறிய பாசனத் திட்டங்களுக்காக நாம் செலவழித்தாக வேண்டிய நிலையில் இருப்பது ரூ. 20 கோடி—என்ற நிலைமை தான்!

முலாம் பூசப்பட்ட ஓட்டை நிரம்பிய சட்டம்!

"நாங்கள் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோமே—அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதுதானே" என்பதாக நீங்கள், வாதத்திற்காகவாவது சொல்ல உங்களுக்கு இந்த நேரத்தில் ஆசை தோன்றும்.

நல்ல திட்டங்கள்—நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்தீர்கள்; அதைப்பற்றி உள்ளூர உங்கள் கருத்து என்ன? (சிரிப்பு) இப்படி உள்ளூர ஒவ்வொரு காங்கிரசுக்காரரும் சிரிக்கிறார்!

நான் இந்த அவையில் உறுப்பினராக இருந்தபோதே, 'நில உச்சவரம்புச் சட்டம் என்பது மிச்சத்திற்கு வரம்பு கட்டுகிற சட்டம் தான்' என்று குறிப்பிட்டேன்.

மத்திய நிதி அமைச்சராக இருந்த திரு. டி. டி. கே. அவர்களும் கூடச் சொன்னார்கள்—'The landed aristocrats have defected our objective'—'எங்களது உச்சவரம்புச் சட்டத்தின் நோக்கத்தைப் பெரிய நிலச்சுவான்தார்கள் தோற்கடித்து விட்டார்கள்' என்று!

உச்சவரம்புச் சட்டம் என்பது பார்ப்பதற்கு முலாம் பூசப்பட்ட ஓட்டை நிரம்பிய சட்டம்!

உருப்படா திட்டத்தை கொடுத்ததா சாதனை?

"ஏன்—சமுதாய நலத் திட்டம் இல்லையா? உலகமே அதைக் கண்டு ஆச்சரியப்படுகிறதே" என்று சொல்லத் துடிப்பீர்கள்!

அது எப்படி நடக்கிறது என்பதைப் பற்றித் தமிழ்நாட்டில் உள்ள 'தினமணி' பத்திரிகையில் பல நாட்கள் தொடர்ந்து கட்டுரை எழுதப்பட்டு வந்ததை நீங்கள் எல்லோரும் படிக்கவேண்டும். அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிற ஒருவரே அதுபற்றி எழுதியிருந்ததைப் படித்தேன்.

"சமுதாய நலத் திட்டம் என்ற அடிப்படையில் பெரும் பணத்தைச் செலவு செய்துகொண்டு—புதிய இலாகாக்களை உற்பத்தி செய்துகொண்டு அதிகாரிகளின் ஆதிக்கத்தை ஏற்படுத்திப் போதுமான பலனையும் அடையவில்லை" என்பதை, பெரிய பெரிய ஆய்வாளர்களெல்லாம் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உருப்படாத சமுதாய நலத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறீர்கள்!

என்ன பலன் தருகிறது—நீங்கள் உருவாக்கிய நிறுவனம்?

"கூட்டுறவுத் துறையை எந்த அளவுக்கு விரிவுபடுத்தியிருக்கிறோம் தெரியுமா? நாங்கள் ஆட்சிப் பொறுப்பை உங்களிடத்தில் விட்டபோது ஆறாயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன—தெரியுமா?" என்று கேட்பீர்கள்.

மாட்டின்மீது ஆயிரக்கணக்கான உண்ணிகள் இருக்கின்றன என்றால், மாட்டின் ஒவ்வொரு சொட்டு இரத்தத்தையும் உறிஞ்சப்படுவதற்குத்தான் அவை பயன்படுகிறதே தவிர, அவற்றினால் மாட்டுக்கு என்ன பயன்?

அதைப்போல இன்றைக்குச் சுயநலக்காரர்கள் — அரசியல் சூதாட்டம் நடத்துகிறவர்கள்—ஊரிலுள்ள பெரிய புள்ளிகளை இழுத்த இழுப்புக்கு வருவதற்குக் கூட்டுறவு நிறுவனங்கள் பயன்படுகின்றனவே தவிர, நாட்டுக்கு என்ன பலன் தருகிறது? அப்பேர்ப்பட்ட கூட்டுறவு நிறுவனத்தைத்தான் என்னிடத்தில் கொடுத்திருக்கிறீர்கள்!

இந்த நிலையில்தான் ஆட்சிப் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்தீர்கள்!

பண்டங்களின் விலைகள் எல்லாம் நிரம்ப ஏறியிருந்தபோது தான் நீங்கள், எங்களிடத்தில் ஆட்சியைக் கொடுத்தீர்களே தவிர, விலை குறைந்திருக்கிற நேரத்தில் அல்ல!

அதுவும், விலையேற்றத்தைத் தடுக்க வேண்டுமென்றால்— விலைக் குறைப்புச் செய்ய வேண்டுமென்றால், அந்த அதிகாரத்தை வேறு இடத்தில் கொடுத்துவிட்டு என்னிடத்தில் ஆட்சியைக் கொடுத்திருக்கிறீர்கள்!

அரசு அலுவலர்களுக்கு அதிகமான அளவுக்குப் பஞ்சப் படி தரவேண்டிய நிலைமையில் இந்த ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறீர்கள்!

இலட்சக்கணக்கான மக்கள்—நம்முடைய இரத்தத்தோடு இரத்தம் கலந்தவர்கள் —சதையோடு சதை கலந்தவர்கள் — பர்மாவில் இருந்தும், இலங்கையிலிருந்தும் இன்றைக்குத் தாயகம் வந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சில ஆண்டுகளில் பத்து இலட்சம் பேர்களுக்கு மேல் இங்கே வந்தாக வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்; ஆனால் அவர்களை, 'வா' என்று சொல்லக்கூடிய தைரியம் இங்குள்ளவர்களுக்கு இல்லை! 'போ' என்று சொன்னால் அவர்களை, வரவேற்றுக்கொள்ள நாடு இல்லை!

(4-ம் பக்கம் பார்க்க)

கேரளத்துக்குக் கைவிரித்து விட்டார் டில்லி அமைச்சர்!

அனுதாபத்துடன் உதவ முயலுவதாக முதலமைச்சர் அண்ணு அறிவிப்பு

கேரளத்தில் உணவு நிலைமை மிகப் பயங்கரக் கட்டத்தை எட்டிவிட்டதென்றே சொல்லலாம்.

நாட்டின் பல இடங்களிலும் உணவு கோரி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மாணவர்கள் நாளும் வேலைநிறுத்தத்திலும், ஊர்வலத்திலும் ஈடுபடுகின்றனர். கல்லூரிகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. யார் யாரைக் குறை சொல்வதென்று யாருக்கும் புரியவில்லை.

கட்சித் தொண்டர்கள் குரலெழுப்புகின்றனர்!

அமைச்சரவையில் பங்கு கொண்டிருக்கும் ச. சோ. கட்சியைச் சேர்ந்த ஊழியர்கள், திருவனந்தபுரம் செக்ரடேரியட்டில் சத்தியாக்கிரகம் செய்கின்றனர்.

சில நாட்களுக்குமுன் சட்டமன்றப் பார்வையாளர் காலரியில் இடது கம்யூனிஸ்டுகள் உணவு கேட்டுக் குரலெழுப்பிய செய்தி வெளியானது நினைவிருக்கலாம்.

காங்கிரசார் பல இடங்களிலும் கூட்டு அமைச்சரவையைக் கண்டித்துக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு கட்சியும் இதைப் போன்று ஏதாவது செய்துவருகின்றன.

எதையும் செய்வதற்கு மக்கள் துணிந்துவிட்டனர்?

பங்கீட்டுக் கடைகளில் வாரத்திற்கு மூன்று நாள் அரிசி கிடைப்பதே அரிதாக இருக்கிறது; இதனால், கள்ளச் சந்தையில் லிட்டர் அரிசி (அரைப்படி) ரூ. 3-க்கு விற்கப்படுகிறது; அதுவும் தாராளமாகக் கிடைப்பதில்லை.

அரிசிக்காக மக்கள் எதுவும் செய்யத் துணிந்தவர்களாக இருக்கின்றனர்.

பல இடங்களிலும் அரிசிக் கொள்ளைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இதனால் கள்ளச்சந்தையில் கூட அரிசி கிடைப்பதில்லை.

அமைதி காக்கப்படுமா?

"நிலைமை இப்படியே நீடித்தால் சட்டத்தையும் அமைதியையும் காப்பது என்பது முடியாததாகி விடும்" என்று உயர்தர அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

உடனடியாக எதுவும் செய்ய உத்தரவாதமில்லை

கேரளத்தில் ஏற்பட்டிருக்கும் இந்நிலைமை பற்றி நாடாளுமன்றத்தில் கேரள உறுப்பினர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக்கொண்டு வந்திருக்கின்றனர்; இதற்குப் பதிலளித்த மத்திய உணவமைச்சர் ஜெகன்ஜீவன்ராம், மத்திய அரசு வாக்களித்தபடி அரிசிதர இயலவில்லை என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறரே தவிர, உடனடியாக எதுவும் செய்வதாகச் சொல்ல முன்வரவில்லை.

முதலமைச்சர் அண்ணவிடம் கேரள அமைச்சர் கோரிக்கை

உடனடியாக கேரளத்திற்கு அரிசி கொடுத்து உதவுமாறு, கேரள அமைச்சர் குஞ்சு தமிழக முதலமைச்சர் அண்ண அவர்களை சென்னையில் சந்தித்துக் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

முதலமைச்சர் அண்ண அவர்கள், தமிழகத்தில் இருப்புக் குறைவாகவே உள்ளது என்றும், ஆயினும், வெளியூரில் உள்ள உணவு அமைச்சர் மதியழகன் வந்ததும் இது குறித்து யோசிப்பதாகவும் அவரிடம் உறுதி கூறியுள்ளார்.

மேலும் அண்ண அவர்கள், மத்திய அரசு போதிய அளவு கோதுமை தமிழகத்திற்குத் தந்தால், கேரளத்திற்கு ஓரளவு அரிசி தர இயலக்கூடும் என்று சொன்னதாகவும் தெரியவருகிறது.

விவாதிக்கத் தயாராகிருர்

கேரளத் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொடுத்துப் பதிலுக்கு அரிசி பெறும் சாத்தியக்கூறுகள் பற்றி அண்ண அவர்களுடன் விவாதிக்கப்போவதாகக் கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, திருவனந்தபுரத்தில் கூறியிருக்கிருர்.

இப்படியொரு யோசனை அறிஞர் அண்ண அவர்கள், சில நாட்களுக்கு முன் உதகையில் கூடிய தென் மண்டலக் குழுக் கூட்டத்தில் வெளியிட்டிருந்தார் என்பது நினைவு கூரத்தக்கது.

11,000 ஊழியர்கள் பாதிக்கப்படுவர்!

சர்க்கரை ஆலைகள் மூடப்படுவதன் எதிரொலி

புதுடில்லி, ஜூலை 25—

கரும்பு பற்றுக்குறைக் காரணமாக 6 சர்க்கரை ஆலைகள் மூடப்படக்கூடும்; 9 ஆலைகளை மூடுவது குறித்து யோசித்து வருகிருர்கள்.

இத்தகவலை உணவு வேளாண்மைத் துறை துணை அமைச்சர் ஏ. பி. ஷிண்டே, மக்களவையில் கூறினுர்.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், 15 ஆலைகள் மூடப்பட்டால் சுமார் 11 ஆயிரம் ஊழியர்கள் பாதிக்கப்படுவர் என்றும், மத்தியப் பிரதேசத்தில் 5 ஆலைகளும், மகாராட்டிரத்தில் 1 ஆலையும், தென் பீகாரில் 4 ஆலைகளும், வட பீகாரில் 5 ஆலைகளும் மூடுவது பற்றி யோசித்து வருகிருர்கள் என்றும் அமைச்சர் கூறினுர்.

திருச்சியில் தீ விபத்து

ரூ. 1.5 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் சேதம்

திருச்சி, ஜூலை 25—

திருச்சியில் முதலியார் சத்திரம் பகுதியில் உண்டான தீ விபத்தில் 72 வீடுகள் தீக்கிரையாயின; இதனுல் 1000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தீவிபத்தினுல் சுமார் ரூ. 1.5 இலட்சம் மதிப்புள்ள சொத்துக்கள் சேதமாயின. இந்தப் பகுதியின் நடுத் தெருவில் உள்ள ஒரு வீட்டின் கூரையில் பகல் 1-மணிக்கு ஏற்பட்ட தீ, விரைவில் பரவியது. பகல் 1-மணிக்கு ஏற்பட்டட தீயை மாலை வரை தீயணைப்புப் படையினர் அணைத்தனர்.

இத்தீவிபத்துக்கான காரணம் தெரியவில்லை.

இனவெறிக் கலவரம்

ரூ. 150 கோடி சொத்து சேதம்--2,100 பேர் கைது

டெட்ராய்ட், ஜூலை 25—

அமெரிக்க நகரங்களிலும், வடகிழக்குப் பகுதியில் உள்ள மற்ற ஊர்களுக்கும் இனக் கலவரங்கள் பரவின. இவற்றில் 29 பேர் உயிரிழந்தனர்; 1,500 பேர் காயமடைந்தனர்; 2,100 கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

20 கோடி டாலர் (ரூ. 150 கோடி) பெறுமான சொத்து சேதமடைந்துள்ளது.

உ. பி. சட்டமன்றத்தில் கைகலப்பு!

நிகழ்ச்சிகள் ஒத்திவைப்பு

லக்னே, ஜூலை 25—

உத்திரப்பிரதேச சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரசு உறுப்பினர்கள், வாய்ச் சண்டையில் இறங்கி அடிதடியில் முடித்திருக்கின்றனர்; காலணிகளைக் கழற்றி ஒருவர்மீது ஒருவர் எறிந்துகொண்டனர்.

இந்த 'அரசியல் நாகரிக நிகழ்ச்சி'யைப் பார்த்த சட்டமன்றத் தலைவர், மன்ற நிகழ்ச்சிகளை அரைமணி நேரம் தள்ளி வைத்தார்.

பாசனத்துறை மானியக் கோரிக்கைக்கு வெட்டுப் பிரேரணையைக் கொண்டுவந்து, எதிர்க்கட்சியான காங்கிரசு உறுப்பினர்கள் வாக்கெடுப்புக் கோரினர்.

வாய்மொழி வாக்கெடுப்பின் மூலம் காங்கிரசாரின் தீர்மானம் தோற்றது; உடனே வாக்குப் பதிவு மூலம் முடிவு செய்யவேண்டுமென காங்கிரசுத் தலைவர் வற்புறுத்தவே குழப்பம் ஏற்பட்டது.

வரி விலக்கா--- கண் துடைப்பா?

புதுடில்லி, ஜூலை 24—

காலணிகளுக்கு மத்திய அரசு விதித்திருந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று அறிவிக்கும் வகையில் மொரார்ஜி தேசாய், 5 ரூபாய் விலையுள்ள காலணிகளுக்கு மட்டும் வரி விலக்கு அளித்திருப்பதாகக் குறிப்பிட்டதற்கு மக்களவை உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்; 'இது வரிச்சலுகை யல்ல; வெறும் கண்துடைப்பு' எனக் கண்டித்தனர்.

சிலர், 'ஐந்து ரூபாய்க்குச் செருப்பு எங்கே கிடைக்கிறது?— வாங்கிக் கொடுங்கள்' என்றும் மொரார்ஜியிடம் கேட்டனர்.

அண்ணு பதில்

[3-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

ஆக, அந்தப் பத்து இலட்சம் பேர்களுக்கும் தங்க இடமும், வாழ்க்கை வசதியும் நாம் தேடிக் கொடுத்தாக வேண்டும்.

இந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எங்களால் என்னென்ன செய்யமுடியுமோ அவற்றைச் செய்துகொண்டுதான் வருகிரேம்!

நெருக்கடிக்கிடையிலும் இயன்றதைச் செய்கிரேம்!

அமைச்சர்கள் தங்களுடைய ஆர்ப்பாட்டங்களையும், சொகுசான வாழ்க்கையையும் குறைத்துக் கொண்டு, எளிய வாழ்க்கைக்கு உட்பட வேண்டும் என்பதாக முதலாவதாக ஏற்படுத்திக் கொண்டோம்.

இரண்டாவதாக, கூடுமான வரையில் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு தமிழிலேயே ஆட்சியை நடத்த—வெளிப்படையாகச் சில ஏற்பாடுகளைச் செய்தோம்!

வெளியில் இருக்கிற மாவட்டங்களுக்கு அமைச்சர்கள் செல்லும்போது, அதிகாரிகள் அவர்களைப் புடைசூழ வருகிற நிலையை நிறுத்தி, 'அவரவர்கள் தங்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்க வேண்டுமே தவிர, கூட நிற்கக்கூடாது' என்று சொல்லியிருக்கிரேம்!

(தொடரும்)

துயர் துடைப்புச் சீரமைப்பு நிதி

சென்னை, ஜூலை 25—

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு ஜூலை 24-ந் தேதி வந்துள்ள தொகை மொத்தம் ரூ. 7,37,777.82 ஆகும்.

மாநில அரசின் கொள்கைகளில் மத்திய அரசின் குறுக்கீடு

'பொறுக்கமுடியாத அளவுக்கு வளர்ந்துவிட்டது'— அமைச்சர் கே. ஏ. மதியழகன் கண்டனம்

தஞ்சை, ஜூலை 24—

"மாநில அரசின் கொள்கைகளில் மத்திய அரசு தலையிடுவது பொறுத்துக்கொள்ளமுடியாத அளவுக்கு மிகுந்துள்ளது"

என்று, தமிழக உணவுத் துறையமைச்சர் திரு. கே ஏ. மதியழகன், தஞ்சையில் நடந்த எழுச்சி நாள் கூட்டத்தில் பேசுகையில் சுட்டிக் காட்டினுர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:—

"இவ்விதம் மத்திய அரசு தலையிடுவதானது, மாநில அரசுகள் கூடுதலான அதிகாரங்கள் கோரிப் போராட்டம் நடத்தவே தூண்டுகிறது.

மாநில அரசுகட்குக் கூடுதலான அதிகாரங்கள் கிடைக்கும்வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தினுலன்றி, மாநில அரசுகள், வாக்காளர்கள் எதிர்பார்ப்பதையோ, தேவையான நல்ல காரியங்களையோ செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.

சாதாரண விவகாரங்களில்கூட மத்திய அரசு தலையிடுகிறது; எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தி. மு. க. ஆட்சி பதவியேற்றவுடன், ஓட்டல்களில் திங்கட்கிழமையும், வியாழக்கிழமையும் இரவு நேரத்தில் உணவு பரிமாறுவதற்கு இருந்து வந்த தடையை நீக்கியது. அடுத்துச் சில நாட்களுக்கெல்லாம், மத்திய அரசிடமிருந்து ஒரு கடிதம் வந்தது; அதில், 'பீகார், உ. பி. மாநிலங்களின் மக்கள் பெரியதொரு உணவு நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கும் நேரத்தில், தமிழக அரசு, உணவுக் கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்துவது கூடாது' என்றும், 'தடை நீக்க ஆணையை ரத்து செய்துவிட வேண்டும்' என்றும் கூறப்பட்டிருந்தது.

உ. பி. மாநில அரசு, தனது மாநிலத்திலிருந்து பருப்பு வகைகளை ஏற்றுமதி செய்வதைத் தடுக்க மத்திய அரசின் அனுமதியைப் பெற்றிருக்கும் அதே நேரத்தில், இங்கிருந்து வேர்க்கடலையையும், வேர்க்கடலை எண்ணெயையும் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியாவதைத் தடை செய்யுமாறு நாம் இன்னும் கேட்டுக்கொண்டிருக்கிரேம்; இதுபற்றி மத்திய அரசு அக்கறை செலுத்தவில்லை.

வட மாநிலங்களுக்கும் — தென் மாநிலங்களுக்கும் இடையில் இவ்விதம் வேறுபாடு காட்டி வருகின்றனர் மத்திய அரசினர்! தமிழ் நாட்டில் போதிய சர்க்கரை உற்பத்தி செய்தும்கூட, இங்கு சர்க்கரைப் பற்றுக்குறை நிலவுகிறது. மத்திய அரசின் தலையீடே இதற்குக் காரணம்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறியும் தமிழ் நாடு புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது."

அறிஞர் அண்ணு

சுற்றுப்பயணம்

ஜூலை 28 காலை 9-மணி: சுந்தரப் பன்சாவடி பண்ணையைப் பார்வையிடல்; காலை 10 மணி: குடந்தை நிகழ்ச்சிகள்.

ஜூலை 29 காலை 9 மணி: மன்னுர்குடி—வேளாண்மைக் கருத்தரங்கு

மாலை 3-30 மணி: மன்னுர்குடி பின்ட்லே பள்ளி தமிழ்ச் சங்க வரவேற்பு

மாலை 4-30 மணி: கந்துகம்பட்டி— பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா

மாலை 5-30 மணி: எடமேலையூர்— பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா

இரவு 7-மணி: மன்னுர்குடி— பொதுக்கூட்டம்

இரவு 10 மணி: வலங்கைமான்— நாடகம்.

குடந்தை வட்டத்தில் முதலமைச்சர் அண்ணு

கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்

ஜூலை 28:

காலை 9 மணி: ஒமியோபதி புதுக் கட்டிடத் திறப்பு விழா;

10 மணி: தத்துவாஞ்சேரி—மிலாடி நபி விழா;

11 மணி: நேரு காய்கறி மார்க்கெட் வர்த்தகர் சங்க வரவேற்பு;

12 மணி: பரிசுத்த இருதய ஆண்டவர் தொழுநோய் மருத்துவ நிலைய வரவேற்பு;

மாலை 3 மணி: கீழக்கொட்டையூர் வள்ளலார் ஏழை மாணவர் இல்லத்தில் வரவேற்பு;

4 மணி: அரசினர் கலைக் கல்லூரி நிகழ்ச்சி;

5 மணி: அரசினர் மகளிர் கல்லூரி புதிய கட்டிடத் திறப்பு விழா;

6 மணி: பந்தி கிராமத்தில் மின் விளக்கு ஏற்று விழா;

இரவு 7 மணி: கும்பகோணம் நகர உயர்நிலைப் பள்ளித் திடலில் பொதுக்கூட்டம்.

நிகழ்ச்சிகளில் மாவட்டச் செயலாளர் ப. நாராயணசாமி, வட்டச் செயலாளர் சு. பத்மனுபன் கலந்துகொள்வர்.

மாயூரத்துக்கு அண்ணு வருகை

சட்டமன்ற உறுப்பினருக்குக் கார் பரிசளிப்பு

மாயூரம் தொகுதிப் பொதுமக்கள் சார்பில், மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கட்கு வரவேற்பும், சட்டமன்ற உறுப்பினர் திரு. கிட்டப்பாவுக்குக் கார் பரிசளிப்பும் 28 7–67 இரவு 8 மணிக்கு மாயூரம் இராசாத் தோட்டத்தில் நடைபெறும்.

திரு. பி. சோமசுந்தரனுர் தலைமையில் விழா நடைபெறும்; இசைமுரசு நாகூர் அனீபா இன்னிசை வழங்குவார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து

சுற்றுப்பயணம்

ஜூலை 27 மாலை 5-15 மணி: நந்தியாலம் காலனி துணைப் பள்ளி திறப்பு விழாவும், வரவேற்பும்;

மாலை 6 மணி: இராணிப்பேட்டை —மகளிர் பொழுதுபோக்கு மன்ற ஆண்டு விழா;

இரவு 7 மணி: வாலாசாப்பேட்டை —பொதுக்கூட்டம்.

ஆஸ்திரேலியாவிடமிருந்து கோதுமை 'தானம்'!

புதுடில்லி, ஜூலை 25—

"நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவுக்கு 1.5 இலட்சம் டன் கோதுமையை நன்கொடையாக வழங்க ஆஸ்திரேலிய அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று, மத்திய உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் ஜெகஜீவன்ராம், மக்களவையில் அறிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-[illegible]) [illegible]